Crl.Misc.39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

CC No.251/2022

| | |
|---|---|
| | Prosecution PW-1 |
| Deposition of Witness for | Defence |
| | Court |
| Name : | முருகேசன் |
| Father's Name : | |
| Village : | |
| Taluk : | |
| District : | |
| Caste : | |
| Calling : | |
| Religion : | |
| Age : | |

**எதிரி** கு**.**வி**.**மு**.**ச**.** பிரிவு **317** ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது**.**
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of **17.03.2023**

**முதல் விசாரணை**

நான் அண்ணாநகரில் குடியிருந்து வருகிறேன். நான் காய்கறி கடை வைத்துள்ளேன். எனது அம்மா காளியம்மாள் ஆடு வைத்து வளர்த்துக்கொண்டிருந்தார். அந்த ஆட்டிற்கு பழைய காய்கறிகளை எடுத்து செல்வதற்காக என் அம்மாவும், என் மனைவியும் 18.05.2022-ம்தேதியில் காலை 7.30 மணிக்கு எனது கடைக்கு மேற்கிலிருந்து

s/d K.Ambiga

நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்

கிழக்கு ஓரமாக வந்துகொண்டிருந்தார்கள். அண்ணா நகரிக்குள்ளிருந்து தெற்கிலிருந்து வடக்காக ஒரு டிப்பர் லாரி ஆரன் அடிக்காமல் வேகமாக வந்து இடது பக்கம் திரும்பும்போது வண்டியின் இடது முன் சக்கரம் என் அம்மாவின் மீது மோதி அவர் கீழே விழுந்துவிட்டார். வண்டியின் இடது முன் சக்கரம் என் அம்மாவின் கால் மீது மோதிவிட்டது. எனது மனைவியும், அங்கிருந்தவர்களும் உடனடியாக என் அம்மாவை ஆம்புலன்சில் ஏற்றி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அரசு மருத்துவமனையில் மருத்துவர் பார்த்துவிட்டு என் அம்மா இறந்துவிட்டதாக தகவல் சொன்னார்கள். என் மனைவி எனக்கு போன் மூலமாக தகவல் சொன்னார். நான் கரூர் நகர காவல்நிலையத்தில் நான் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும்புகார்தான் நான் கொடுத்த புகார். **அது அ.சா.ஆ.1 ஆக குறியிடப்படகிறது.** என் அம்மாவின் பிரேதத்தின் மீது போலீசார் விசாரணை செய்தார்கள். இவ்வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை** இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

s/d K.Ambiga

நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்

Crl.Misc.39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

CC No.251/2022

| | | |
|---|---|---|
| | | Prosecution PW-2 |
| Deposition of Witness for | | Defence |
| | | Court |
| Name | : | சிங்காரவேல் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

**எதிரி** கு**.**வி**.**மு**.**ச**.** பிரிவு **317** ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது**.**
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of **17.03.2023**

**முதல் விசாரணை**

நான் அண்ணாநகரில் குடியிருந்து வருகிறேன். நான் டீ கடை வைத்துள்ளேன். புகார்தாரர் முருகேசனை எனக்குத் தெரியும். நான் அண்ணாநகரில் எனது கடைக்கு வெளியே நின்று டீ குடித்துக்கொண்டிருந்தேன். ரங்கநாயகிபுரத்திலிருந்து ஒரு

s/d K.Ambiga

நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்

டிப்பர் லாரி பதிவு எண் ஞாபகம் இல்லை. ஆரன் அடிக்காமல் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வேகமாக வந்து இடது புறமாக திரும்பியது. அ.சா.1 ன் அம்மா காளியம்மாளும், அவரது மனைவியும் ரோட்டிற்கு ஓரமாக நடந்து வந்துகொண்டிருந்தார்கள். அந்த டிப்பர் லாரி வேகமாக திரும்பி காளியம்மாள் மீது மோதி வண்டியின் முன் இடது கக்கரம் காளியம்மாவின் காலின்மீது ஏறிவிட்டது. உடனடியாக ஆம்புலன்ஸ் வரச்சொல்லி அவரை மருத்தவமனைக்கு அனுப்பிவைத்தோம். போலீசார் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை** இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

s/d K.Ambiga

நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்

Crl.Misc.39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

CC No.251/2022

| | | |
|---|---|---|
| | | Prosecution PW-3 |
| Deposition of Witness for | | Defence |
| | | Court |
| Name | : | கண்ணாத்தாள் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

**எதிரி** கு.வி.மு.ச. பிரிவு **317** ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of **17.03.2023**

**முதல் விசாரணை**

நான் அண்ணாநகரில் குடியிருந்து வருகிறேன். நான் காய் கடை வைத்துள்ளேன். புகார்தாரர் முருகேசன் எனது கணவர். என் கணவர் காய்கறி கடை வைத்து நடத்தி வருகிறார். 18.05.2022-ந் தேதியில் மாமியார் வைத்திருந்த ஆட்டிற்கு

s/d K.Ambiga

நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்

காய் வாங்குவதற்காக நானும், எனது மாமியாரும் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வந்துகொண்டிருந்தோம். ஒரு பெரிய டிப்பர் லாரி தெற்கிலிருந்து வடக்கு நோக்கி சேகர் அன்கோ கடை முன்பாக வேகமாக ஆரன் அடிக்காமல் இடது பக்கம் திரும்பி என் மாமியார் மீது மோதி அவர் கீழே விழுந்துவிட்டார். லாரியின் இடது முன் சக்கரம் என் மாமியாரின் காலில் மீது ஏறிவிட்டது. ஆம்புலன்ஸ் வரச்சொல்லி மருத்துவமனைக்கு எடுத்து சென்றோம். அங்கு என் மாமியார் இறந்துவிட்டதாக சொன்னார்கள். நான் என் கணவருக்கு தகவல் சொன்னேன். என் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார். எதிரியை நான் பார்த்தால் அடையாளம் காட்ட முடியும். (எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச..பிரிவு U/s.317 ன் கீழ் மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது). இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை** இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

s/d K.Ambiga

நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்